பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

09 11 2025 6.30

தலைப்புச் செய்திகள்

1) சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) புற்றுநோய் பாதிப்பிலிருந்து மகளிரை பாதுகாக்கும் நோக்கில் மருத்துவ வாகன சேவை தொடங்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

3) டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

4) தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) ஜப்பான் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 9 தங்கம் உட்பட 23 பதக்கங்களை வென்றது.

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக ஆகாஷ்வாணியில் வெளியான செய்தியையும் பகிர்ந்துள்ளார்.

கைவினைக் கலைஞர்களின் மேம்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாகவும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><><<

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளை திமுக எதிர்க்கவில்லை என்று அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள காணொலியில், சட்டப்பேரவை தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில், போதுமான காலஅவகாசம் இன்றி

இப்பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்பதுதான் திமுக-வின் நிலைப்பாடு என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மக்களின் வாக்குரிமை காப்பதற்கு திமுக எப்போதும் துணை நிற்க தயாராக உள்ளது என்றும் திரு ஸ்டாலின் அந்த காணொலியில் தெரிவித்துள்ளார்.

>><><><><<

புற்றுநோய் பாதிப்பிலிருந்து மகளிரை பாதுகாக்கும் நோக்கில் மருத்துவ வாகன சேவை தொடங்கப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார். இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>><><><><<

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார். நாகை மாவட்டம் சாமந்தான்பேட்டை கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார். இப்பணிகள் மூலம் மீனவர்கள் ஆண்டு முழுவதும் மீன்பிடிக்க செல்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டு படகுகள் மற்றும் பொருட்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>><><><><<

நியாய விலைக் கடைகளில் கோதுமை கையிருப்பில் உள்ளதை திமுக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், மாநிலம் முழுவதும் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளில் கோதுமை இல்லை என்ற செய்தி வெளியாகி உள்ளதாக கூறியுள்ளார்.

நெல் கொள்முதல் தொடங்கி, கோதுமை விநியோகம் வரை அத்தியாவசியப் பொருட்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் கூட திமுக அரசு மெத்தனமாக செயல்படுவது கண்டனத்திற்குரியது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ள உணவுத்துறை அமைச்சர் திரு சக்கரபாணி, மத்திய அரசின் ஒதுக்கீட்டின் படி நியாயவிலைக் கடைகளில் கோதுமை வழங்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், நவம்பர் மாத்திற்கான கோதுமை ஒதுக்கீடு முழுமையாக வரும் 15 ஆம் தேதிக்குள் நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறியுள்ளார்.

நடப்பாண்டு குறுவை பருவத்தில் வரலாற்றுச்சாதனையாக 13 லட்சத்து 48 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உண்மை நிலையை புரிந்து கொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி அரசியல் செய்ய வேண்டாம் என்றும் திரு சக்கரபாணி அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

>><><><><><<

தமிழகத்தில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த மாதம் சென்னையில் மட்டும் 600-க்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்த உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

>><><><><><<

தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>><><><><><<

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி சுற்றுவட்டார கிராமங்களில் சிறுத்தை நடமாட்டம் உள்ளதால்  விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

இந்த சிறுத்தை கால்நடைகளை தாக்கி வருவதாகவும் இதன்காரணமாக வனத்துறையினர் கூண்டு வைத்து அந்த சிறுத்தை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

ரிஷிவந்தியம் அரசு கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் மாநில அமைச்சர்கள் திரு கோவி செழியன், திரு எ வ வேலு பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினர்.

-------------------

நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு முதன்மை செயலர் திரு சத்தியபிரத சாஹு பங்கேற்று கடன் உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

-------------------

திருவாரூர் மாவட்டம் பொதக்குடி தர்காவின் கந்தூரி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தனக்கூடு ஊர்வலம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

-------------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் பிருத்வி மங்கலம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி 2 பேர் உயிரிழந்தனர்.

-------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 3 பேரை காவல் துறையினர் கைது செய்தனர்.

>><<>><<>><<

விளையாட்டுச் செய்திகள்

ஜப்பான் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 9 தங்கம் உட்பட 23 பதக்கங்களை வென்றது.

Promod Bhagat, Naveen Sivakumar, Sukant Kadam, Krishna Nagar ஆகியோர் ஆடவர் ஒற்றையர் பிரிவிலும், துளசிமதி முருகேசன், நித்யஸ்ரீ சுமதி சிவன் ஆகியோர் மகளிர் ஒற்றையர் பிரிவிலும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் துளசிமதி முருகேசன் – மானசி இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் Promod Bhagat – மணிஷா ராமதாஸ் இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் Promod Bhagat - Sukant Kadam இணையும் தங்கப்பதக்கம் வென்றன.

சுகந்த், மன்தீப், மணிஷா ஆகியோர் ஒற்றையர் பிரிவுகளிலும், ஹர்தீப் – Ruthick இணையும், ஜெகதீஷ்- நவீன் இணையும், நிதிஷ்- துளசிமதி இணையும் இரட்டையர் பிரிவுகளில் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.

ஜெகதீஷ், குமார், நீரஜ், சூரியா உட்பட 9 பேர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

--------------------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-8, 11-8, 11-4 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Timothy Brownell-ஐ வென்றார்.

---------------------

ஈராக்கில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

---------------------

தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mansi Singh மகளிர் ஒற்றையர் பிரிவிலும், Ginpaul Sonna ஆடவர் ஒற்றையர் பிரிவிலும் பட்டம் வென்றனர்.

>> End of News <<